# பெரியாழ்வார் திருமொழி 2-2
## அரவணையாய்
(கண்ணனை முலையுண்ண அழைத்தல்)

128 * அரவணையாய் ஆயரேறே * அம்மம் உண்ணத் துயிலெழாயே *
இரவும் உண்ணாது உறங்கி நீ போய் * இன்றுமுச்சி
கொண்டதாலோ **
வரவும் காணேன் வயிறசைந்தாய் * வனமுலைகள் சோர்ந்து பாய *
திருவுடைய வாய் மடுத்துத் * திளைத்து தைத்துப் பருகிடாயே (1)

129 வைத்த நெய்யும் காய்ந்த பாலும் * வடிதயிரும் நறு
வெண்ணெயும் *
இத்தனையும் பெற்றறியேன் * எம்பிரான் நீ பிறந்த பின்னை **
எத்தனையும் செய்யப் பெற்றாய் * ஏதும் செய்யேன் கதம்படாதே *
முத்தனைய முறுவல் செய்து * மூக்குறுஞ்சி முலையுணாயே (2)

130 தந்தம் மக்கள் அழுது சென்றால் * தாய்மாராவார் தரிக்ககில்லார் *
வந்து நின்மேல் பூசல் செய்ய * வாழவல்ல வாசுதேவா **
உந்தையார் உன்திறத்தரல்லர் * உன்னை நானொன்று உரப்ப
மாட்டேன் *
நந்தகோபன் அணி சிறுவா * நான் சுரந்த முலையுணாயே (3)

131 கஞ்சன் தன்னால் புணர்க்கப்பட்ட * கள்ளச் சகடு கலக்கழிய *
பஞ்சியன்ன மெல்லடியால் * பாய்ந்த போது நொந்திடும் என்று **
அஞ்சினேன் காண் அமரர் கோவே * ஆயர் கூட்டத்து
அளவன்றாலோ *
கஞ்சனை உன் வஞ்சனையால் * வலைப்படுத்தாய் முலையுணாயே (4)

132 தீயபுந்திக் கஞ்சன் உன்மேல் * சினமுடையன் சோர்வு பார்த்து *
மாயன் தன்னால் வலைப்படுக்கில் * வாழகில்லேன் வாசுதேவா **
தாயர் வாய்ச் சொல் கருமம் கண்டாய் * சாற்றிச் சொன்னேன்
போக வேண்டா *
ஆயர்பாடிக்கு அணிவிளக்கே * அமர்ந்து வந்து என்
முலையுணாயே (5)

133 மின்னனைய நுண்ணிடையார் * விரிகுழல் மேல் நுழைந்த வண்டு *
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர் * இனிதமர்ந்தாய் உன்னைக்
கண்டார் **
என்ன நோன்பு நோற்றாள் கொலோ * இவனைப் பெற்ற

வயிறுடையாள் *
என்னும் வார்த்தை எய்துவித்த * இருடீகேசா முலையுணாயே (6)

134 பெண்டிர் வாழ்வார் நின்னொப்பாரைப் * பெறுதுமென்னும்
ஆசையாலே *
கண்டவர்கள் போக்கொழிந்தார் * கண்ணிணையால் கலக்க
நோக்கி **
வண்டுலாம் பூங்குழலினார் * உன் வாயமுதம் உண்ண வேண்டி *
கொண்டு போவான் வந்து நின்றார் * கோவிந்தா நீ
முலையுணாயே (7)

135 இருமலை போலெதிர்ந்த மல்லர் * இருவரங்கம் எரி செய்தாய் *
உன்
திருமலிந்து திகழு மார்வு * தேக்க வந்து என்னல்குலேறி **
ஒருமுலையை வாய் மடுத்து * ஒருமுலையை நெருடிக் கொண்டு *
இருமுலையும் முறை முறையா * ஏங்கி ஏங்கி இருந்துணாயே (8)

136 அங்கமலப் போதகத்தில் * அணிகொள் முத்தம் சிந்தினாற் போல் *
செங்கமல முகம் வியர்ப்பத் * தீமை செய்து இம்முற்றத்தூடே **
அங்கம் எல்லாம் புழுதியாக * அளைய வேண்டா அம்ம விம்ம *
அங்கமரர்க்கு அமுதளித்த * அமரர் கோவே முலையுணாயே (9)

137 ஓடவோடக் கிங்கிணிகள் * ஒலிக்கும் ஓசைப் பாணியாலே *
பாடிப் பாடி வருகின்றாயைப் * பற்பனாபன் என்றிருந்தேன் **
ஆடியாடி அசைந்தசைந்திட்டு * அதனுக்கேற்ற கூத்தை ஆடி *
ஓடியோடிப் போய்விடாதே * உத்தமா நீ முலையுணாயே (10)

138 * வாரணிந்த கொங்கை ஆய்ச்சி * மாதவா உண்ணென்ற
மாற்றம் *
நீரணிந்த குவளைவாசம் * நிகழ நாறும் வில்லிபுத்தூர் **
பாரணிந்த தொல் புகழான் * பட்டர்பிரான் பாடல் வல்லார் *
சீரணிந்த செங்கண்மால் மேல் * சென்ற சிந்தை பெறுவார்
தாமே (11)